# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2373/36 - 2024 පෙබරවාරි මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.02.29

*2373/36 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்பட வேண்டிய 27(1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 101137 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டுள்ளதும் இங்கிரியா வீதி மீபே, பாதுக்கையில் அமைந்துள்ளதுமான எஸ்எல்ரி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2023, செத்தெம்பர் 07 ஆந் திகதிய 2348/37 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "வியாபார நிருவாக முதுமாணி" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. எஸ்எல்ரி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறைந்தபட்சம் 15 திறமைச் சித்திகளைக் (SLQF 10) கொண்ட ஆராய்ச்சி கூறுகள் உட்பட குறைந்தபட்சம் 60 சித்திகளைப் பூர்த்திசெய்து இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியலில் விஞ்ஞான முதுமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்துகொள்ள வேண்டும் :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர்கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மட்டம் 6 இற்கு சமமான அதற்கு மேற்பட்ட ஏதேனும் பொறியியல் பட்டம் ; அல்லது

(ஆ) கல்விசார் வழி மூலமும் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவத்தின் மூலமும் பெறப்பட்ட இயைபான துறை ஒன்றில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட உயர் தொழில் நிறுவகம் ஒன்றின் உறுப்பாண்மையின் ஏதேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட வகுதி.

2. எஸ்எல்ரி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (SLT) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) வருட மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்க குறியீடுகள்* |
|---|---|
| இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியலில் விஞ்ஞான முதுமானி | எம்எஸ்சீ (இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2024, பெப்புருவரி 22.

EOG 02-0202

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.